[திரு. த. பழனி]

**(53) திருச்சி சாராயக்கலவைத் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவு நீர் குறித்து.**

**திரு. கு. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி நகரிலுள்ள சாராயக் கலவைத் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவு நீரின் துர்நாற்றத்தால் செந்துண்ணீர்புரம் குழந்தைகள் மயக்கமடைவதோடு அப்பகுதியிலுள்ள குடிநீர் மற்றும் விவசாயக் கிணறுகள் பாதிக்கப்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(பதில் இல்லை)

**(54) தாம்பரபரணி ஆற்றில் கே. டி. சி. கழகப் பணிமனை கழிவு நீர் கலப்பது குறித்து.**

**திரு. வி. எஸ். டி. சம்சுல் ஆலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''பாளையங்கோட்டை தொகுதி, வண்ணாரப்பேட்டையிலுள்ள கே.டி.சி. போக்குவரத்துக் கழக பணிமனையிலிருந்து வெளிவரும் கழிவுநீர் தாமிரபரணி ஆற்றில் கலப்பதால் அப்பகுதி மக்களுக்கு ஏற்படும் சுகாதாரக்கேடுகள் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(பதில் இல்லை)

**(55) பாலாற்றில் தோல் தொழிற்சாலை கழிவுநீர் காப்பது குறித்து**

**திரு. த. பழனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''ஆற்காடு, இராணிப்பேட்டை ஆகிய பகுதிகளில் பாலாற்றில் தோல் தொழில் சம்பந்தப்பட்ட கழிவு நீர் கலப்பதால் அப்பகுதியிலுள்ள குடிநீர் திட்டங்கள் மற்றும் விவசாய நிலங்கள் பாழ்படுவதால் அப்பகுதிவாழ் மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(பதில் இல்லை)

**(56) கூடலூர் அரசு மருத்துவமனையில் படுக்கை வசதி.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. உச்சி அவர்கள்** ''நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டத்திலுள்ள அரசு

[பேரவைத் தலைவர்]

மருத்துவமனையில் போதுமான படுக்கை வசதிகள் மற்றும் இதர வசதிகள் இல்லாமையால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' கவன ஈர்ப்பு தீர்மானத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர அறிவிப்புக் கொடுத்திருக்கிறார். அவர் இருக்கையில் இல்லை.

(பதில் இல்லை)

**(57) புதுக்கோட்டை பூம்புகார் நிறுவனம் மூடப்பட்டுள்ளது குறித்து.**

**திரு. ஜே. முகம்மது கனி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''புதுக்கோட்டை நகரில் இயங்கி வந்த கைவினைக் கலைஞர்களை கொண்டு ஒப்பனை பொருள்கள் தயாரிக்கும் பூம்புகார் நிறுவனம் 31—3—1986 முதல் மூடப்பட்டுள்ளதன் பொருட்டு வேலை இழந்த பெண்கள் 1—4—1986 முதல் உண்ணா விரதம் இருந்து வருவது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல அந்த தொழிலகம் இப்போது மூடப்பட்டிருக்கிறது. அதில் ஏறக்குறைய 14 பெண்கள் பீஸ் ரேட்டில் வேலை செய்கிறார்கள். ஏறத்தாழ 70,000 ரூபாய்க்கு மேல் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் தேங்கியிருக்கின்றன. தேங்கியிருக்கின்ற பொருள்கள் உடனடியாக விற்பதற்கு எந்தவிதமான வாய்ப்பும் இல்லை. ஒரு பக்கத்தில் பார்த்தால் 14 பெண்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள் என்ற எண்ணம் இருக்கிறது. அதே நேரத்தில் உற்பத்தி செய்த சிறுசிறு பாய்கள், தடுக்குகள் போன்றவை விற்பனைக்கு லாயக்கில்லாமல் இருக்கிறது. என்றாலும் கூட தக்க நடவடிக்கை மூலம் பாதிக்காதபடி, தொடர்ந்து பாதுகாத்துக்கொள்ள ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. முகம்மது கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பூம்புகார் விற்பனை நிலையம் எப்போது மறுபடியும் துவங்கும்? இப்போது விற்பனை நிலையத்தை பொறுத்தவரை மாநில அளவிலே இருக்கின்ற பூம்புகார் விற்பனை நிலையத்திற்கு தேவைக்கு அதிகமான அதிகாரிகள் இருப்பதால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்தினை சொல்வதன் காரணமாக, இதைப்போல மாவட்டத்தில் உள்ள எல்லா மையங்களிலும் இதே நிலைமை ஏற்படுவதால் இந்த பூம்புகார் விற்பனை நிலையத்திற்கு ஒன்றுக்கு மேற்பட்ட அதிகாரிகள்